செ.வெ.எண்: 7 / பிப்ரவரி /2020

நாள்: 02.02.2020

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரசு பொருட்காட்சியில் கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் பிராணிகள் வதைதடுப்பு சங்கம் சார்பில் நடைபெற்ற நாய்கள் கண்காட்சியை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.தா.சாந்தி, அவர்கள் இன்று (02.02.2020) பார்வையிட்டு பரிசளித்தார்.

-------------

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரசு பொருட்காட்சியில் கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் பிராணிகள் வதைதடுப்பு சங்கம் சார்பில் நடைபெற்ற நாய்கள் கண்காட்சியை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.தா.சாந்தி, அவர்கள் இன்று (02.02.2020) பார்வையிட்டு பரிசுகளை வழங்கினார்.

திருச்சிராப்பள்ளி தென்னூர், பட்டாபிராமன் தெரு (மாருதி மருத்துவமனை அருகில்) பொருட்காட்சி மைதானத்தில், தமிழ்நாடு அரசின் அனைத்து அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள் பங்கேற்று அரசின் திட்டங்கள், சாதனைகள் மற்றும் கொள்கை குறிப்புகளை பொது மக்கள் அறிந்து கொண்டு பயனடையும் வகையிலும், பொழுது போக்கு அம்சங்களுடனும் கூடிய அரசு பொருட்காட்சி 04.01.2020 முதல் தினமும் மாலை 4 மணிமுதல் இரவு 10 மணி வரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இப்பொருட்காட்சியில் செல்ல பிராணிகள் வளர்ப்பில் ஆர்வத்தையும், பிராணிகள் நலன் மற்றும் உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கால்நடைபராமரிப்புத் துறை மற்றும் பிராணிகள் வதைதடுப்பு சங்கம் சார்பில் இன்று (02.02.2020) பிற்பகல் 4 மணிஅளவில் **"நாய்கள் கண்காட்சி"** சிறப்பாக நடைபெற்றது. இந்நிழ்ச்சிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.தா.சாந்தி, தலைமையேற்று துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் 50 வளர்ப்பு நாய்கள் பதிவு செய்யப்பட்டு, ஆய்வுக்குப் பின் காட்சிப்படுத்தப்பட்டன. பொது மக்களால் பிராணிகள் வதைதடுப்பு உறுதி மொழி ஏற்கப்பட்டது.

இக்கண்காட்சியில் ராஜபாளையம், கோம்பை, சிப்பிப்பாறை உள்ளிட்ட உள்நாட்டு நாய் இனங்களுடன் லேப்ரடார், ஜெர்மன் ஷெப்பர்டு, பொமரேனியன், பக், டாபர்மேன், பாக்ஸர், டேஷன்ட், கிரேட்டேன், டால்மேஷியன், சைபீரியன் அஸ்கி போன்ற வெளிநாட்டு இனங்களையும் சேர்த்து 15 வகை இன நாய்கள் காட்சிப்படுத்தப்பட்டன. கண்காட்சியில கலந்துகொண்ட இவ்வின செல்ல பிராணிகளை மரு.அன்பரசி, மரு.சரவணன், மரு.பத்மாவதி, மரு.கார்த்திக், மரு.சௌபரண்யா, கொண்டமருத்துவர் குழுவால் ஆய்வு செய்யப்பட்டன. நாய்களின் இனத்தூய்மை, கீழ்படியும் திறன், பராமரிப்பு போன்ற பண்புகளின் அடிப்படையில், நடுவர்கள் மரு.சந்துரு, மரு.செந்தில் குமார், மரு.கணேஷ்குமார், மரு.பிரசன்னா ஆகியோர், இன வாரியாக சிறந்த நாய்களை தேர்வுசெய்தனர். மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.தா.சாந்தி, இவற்றின் உரிமையாளர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

இரயில்வே பாதுகாப்புபடை, மோப்பநாய் பிரிவு நாய்களின் மோப்பத் திறன் விளக்கம், வெடிகுண்டுகளை கண்டறியும் திறன் மற்றும் தீ வளையம் தாண்டுதல் போன்ற சாகச நிகழ்ச்சிகளை பொதுமக்கள் ஆரவாரம் செய்து கண்டு மகிழ்ந்தனர்.

இந்நிகழ்ச்சியில் திருச்சி மண்டல இணை இயக்குனர் மரு.எஸ்தர்ஷீலா, மேற்கு வட்டாட்சியர் திருமதி.தி.சத்யபாமா, பன்முக மருத்துவமனை பிரதம மருத்துவர் மரு.மகேஷ்,உதவி இயக்குனர்கள் மரு.சுகுமார், மரு.மருதைராஜ், மரு.முஸ்தாபா, கால்நடை பல்கலைக்கழக பேராசிரியர் மருத்துவர்.ரிச்சர்டு ஜெகதீசன், மரு.சுகுமார், பன்முக மருத்துவமனை மரு.விஜயகுமார், மரு.சிவச்சந்திரன், மரு.மணிகண்டன், மரு.வருணா உள்ளிட்ட கால்நடை மருத்துவர்களும், கால்நடை ஆய்வாளர்கள், உதவியாளர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**